- இறுதிப் படிமுறையாக அவர்கள் அந்த ஆளுடன் உள்ள ஒரு பொதுப் பட்டறிவைப் பற்றி வாக்கியம் ஒன்றை அந்த இணைக்கும் கோட்டில் எழுதுவர். (எ.கா. பிறந்த நாளைக் கொண்டாடியமை, ஓர் அன்பளிப்பைப் பெற்றமை, வீட்டு வேலை ஒப்படைகளுக்கு உதவியமை, கதைகள் கூறியமை, எழுதுவதற்கு கற்றுக்கொடுத்தமை, முதலியவை) எதிர்மறை நிகழ்வுகளுக்கும் ஓர் இடம் இருக்க வேண்டும். அப்படியான நிலைகளில் வாக்கியங்கள் எதிர்மறை அடையாளத்துடன் தொடங்கவேண்டும்.
- 4 பேர் கொண்ட குழுவில் மாணவர்கள் தங்களுக்குள் தாம் கண்டு கொண்ட குடிபெயர்வு தன்வரலாற்றைக் கூறி மற்றவர்களதும் இடங்கள் மற்றும் நிகழ்வுகள் பற்றியும் கருத்துக்களைக் கூறுவர்.
- இறுதியாக நிறைவு மதிப்பீடு கேள்விகளும், தூண்டிகளும்:
  - தாய் நாடு என்பது உமக்கு தரும் கருத்து என்ன? எங்கு உண்டு? ஏன்?
  - தாயகம் எனும் கருத்துடன் முதன்முதலாக எதனைத் தொடர்புபடுத்துகிறீர்? வாழிடம், பிறந்த இடம், குடும்பம், நண்பர்கள் முதலியவை)
  - உமது தாயகம் எனப் பல இடங்களை பட்டியலிட்டீரா? ஆம் எனில், எவை? ஏன்?
  - உமது இடத்தில் அல்லது வாழிடத்தில் தன்னிடம் போல உணர்தல் எவ்வளவு இன்றியமையாதது (0 – 5 அளவுகோலில்)?
  - நீர் தற்போது வாழும் நாடு உமது தாய் நாடாகுவதற்கு நீர் என்ன செய்ய முடியும்?
  - உமது தாய் நாடு இங்கு எனில் உமது பண்பாட்டினை இழப்பீரா?
- நடத்தக்கூடிய ஆழமான ஆய்வு: தாய்நாடு பற்றி பல்வேறு ஆட்களையும் நேர்காணல் செய்தல்.

# 2.5 நேற்று – இன்று – நாளை

**இலக்கு**

*ஒரு நேரக்கோடு வாயிலாக மாணவர் தம்முடைய குடிபெயர் தன்வரலாறு பற்றி ஒரு முழுமனப் பதிவை பெற்றுக் கொள்வர். இது தங்களது தன்வரலாற்றில் குடிபெயர்வின் தாக்கம் பற்றி உருக்காட்டலுக்கு ஊக்கப்படுத்தும் அதேவேளையில் மறுபக்கம் அவர்களது சொந்த ஆர்வங்கள், விருப்புக்கள், நம்பிக்கைகளுடன் ஈடுபாடுகாட்டவும், இடமளிக்கும்.*

வகுப்பு 4 - 9 | 90 மணித்துளிகள்

**கருவிகள்:**
நேரக் கோடு அல்லது வாழ்வுக்கோட்டுக்கான ஒரு A3 தாள். (கீழே எடுத்துக்காட்டைப் பார்க்கவும்)

**குறிப்புகள்:**

இந்தப் பயிற்சி பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்டது: Gudjons, H., Wagner-Gudjons, B. and Pieper, M: (2008): Auf meinen Spuren. Übungen zur Biografiearbeit. (என் தடயங்களைப் பின்பற்றி, தன்வரலாறுகளுடன் செயற்படும் பயிற்சிகள்). Bad Heillbrunn: Klinkhardt.

**நடைமுறை:**


- தொடக்கத்தில் மாணவர்கள் பின்வரும் வினாக்களுடன் ஒரு தாளைப் பெறு-வர். ஆசிரியர் இப் பயிற்சியை அறிமுகப்படுத்தி விளக்கமளித்தபின் மாணவர்கள் அதற்கு பதிலளிப்பர்.

அ) எனக்கு அகவை 8 ஆக இருக்கும் போது
- நான் முக்கியமாக ஆர்வம் செலுத்திய விடயம்
- ஒரு சிக்கல், ஒரு கடுமையான விடயம்
- ஒரு நம்பிக்கை அல்லது ஒரு விருப்பம்

ஆ) எனது வாழ்வில் இந்தநாள்

இ) இன்னும் 10 ஆண்டுகளில்:

## நேரக்கோடு அல்லது வாழ்வுக் கோட்டுக்கு எடுத்துக்காட்டு




- இரண்டாம் கட்டத்தில் சுழியத்தில் (ஸ்ரீஅகவை) ஆரம்பித்து 25 வயது மட்டும் விரிக்கப்படும் ஒரு நேர் ∴ வாழ்வுக்கோட்டை (A3 தாளில்) வரைவர். தனியாள் பணியாக மாணவர் இந்த நேரக் கோட்டில் எந்த இன்றியமையாத நிகழ்வுகளைப் பதிவு செய்யலாம் என எண்ணுவர். எதிர்மறை என உணரப்படும் நிகழ்வுகள் கீழே நிரற்படுத்தப்படும். உடன்பாடானவை மேலே பதிவு செய்யப்படும். மாற்றமுறும் சூழ்நிலைகளுக்கு (பாடசாலை தொடக்கம், குடிபெயர்வு, வேலையின் தொடக்கம், சிலசமயம் குடும்பத் தொடக்கம், குடியகல்வு முதலியவை) பொருத்தமான குறியீடுகள் உருவாக்கப்பட முடியும்.
- நேரக்கோடுகள் அல்லது வாழ்வுக்கோடுகள் உள்ள பக்கங்கள், காட்சிப்படுத்தப்பட்டு, ஆய்வுக்குட்படுத்தப்பட்டு குறிப்புச் செய்யப்பட்டு கலந்துரையாடப்படும். அப்படிச் செய்யும் போது மனப்பதிவுகள் பரிமாறப்பட்டு, கேள்விகளுக்கு விடைகள் வழங்கப்படும்.
- முழு வகுப்புடன் தொகுக்கும்போது பிரதிபலிக்கும் முதன்மையான கேள்விகளும் தூண்டிகளும்.
  - இந்த வேலையில் எவ்வகையான உணர்வுகளைப் பட்டறிந்தீர்?
  - உமது வாழ்வுக்கோட்டில் பொதுமைகளும் வேறுபாடுகளும் உண்டா? எங்கே?
  - இப் பொதுமைகளையும் வேறுபாடுகளையும் எதனுடன் தொடர்புபடுத்திக் கூறுவீர்? (பால், அகவை, குடிபெயர்வுப் பின்னணி முதலியவை)
  - எந்த நிகழ்வுகள் குறிப்பாக உடன்பாடானவை / எதிர்மறையானவை எனக் குறிக்கப்படுகின்றன? ஏன்?
  - எவ்வாறு ஒவ்வொன்றும் இறந்த, நிகழ், எதிர்காலங்களுடன் இணைக்கப்படுகிறது?